IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.137/2010
DEPOSITION OF WITNESS

வா.சா. 1 சாட்சி ரமேஷ்பாண்டி த.பெ.முருகேசன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 17.02.2026 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. அசல் வழக்கை நான்தான் தாக்கல் செய்தேனா என்றால் எனது தாயார் தாக்கல் செய்தார். வழக்கு சொத்து பற்றி முழு விபரம் தெரியுமா என்றால் தெரியும். யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனது பக்கத்தில் குடியிருக்கும் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யபட்டுள்ளது. தாவா சொத்தில் எவ்வளவு காலமாக குடியிருந்து வருகிறேன் என்றால் 1998 ம் ஆண்டு முதல் குடியிருந்து வருகிறேன். பிரதிவாதிகள் எப்போது இருந்து வழக்கு சொத்திற்கு அருகே குடியிருந்து வருகிறார்கள் என்றால் நாங்கள் குடியிருந்து வருவதற்கு முன்பாக இருந்து குடியிருந்து வருகிறார்கள்.

2. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் சர்வே எண். 169/1D, விஸ்தீரணம் 6.5 செண்டு ஆகும். சொத்தின் நான்குமால் என்ன என்றால் கிழக்கு பக்கம் முத்து வீடு, மேற்கு பக்கம் வாய்க்கால், தென் பக்கம் செல்வக்குமார் மற்றும் பாண்டி வகையறா, வடக்கே லெட்சுமணன், பாண்டி வகையறா மற்றும் ஒரு கறிக்கடைக்காரர் வீடு உள்ளது.

3. நில அளவையர் அளந்து பார்த்தபோது ஆக்கிரமித்துள்ளதாக கூறினாரா என்றால் செல்வக்குமார் வகையறா பகுதியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறினார். ஆக்கிரமிப்பின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் துல்லியமாக தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் சொன்ன சங்கதிகளை சொல்லிதான் வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் நீதிமன்ற உத்தரவின் படி தாவா சொத்தை அளந்து பார்த்துள்ளார் என்றால் சரிதான்.

4. நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு ஆட்சேபணை செய்துள்ளேனா என்றால் ஆட்சேபணை செய்துள்ளேன். மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு நான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.17 11:14:19 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.